வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No.: P. 1632

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

விலை ரூ. 30/=



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 31.10.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 304 | பக்கங்கள் : 08

# போதைப்பொருளுக்கு எதிராக மோத நானும் எனது அரசாங்கமும் தயார்!

## ஜனாதிபதி அநுர குமார

- கறுப்பு இராச்சியத்துக்கு நாட்டில் இடமில்லை
- படை தரப்பும் குற்றவாளிகளுக்கு உடந்தை

கொழும்பு, ஒக்ரோபர் 31

**“நானும் எனது அரசாங்கமும் போதைப்பொருளுக்கு எதிராக மோதுவதற்குத் தயார்”, இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.**

போதைப் பொருளுக்கு எதிரான ‘முழு நாடும் ஒன்றாக’ தேசிய செயல் திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் கொழும்பு - சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில், உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சிறைத் தண்டனை விதிக்கப்படுவோரில் 64 வீதமானோர் போதைப்பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள். எம்முடைய எதிர்கால சந்ததியில் பெரும்பாலானோர் சிறைகளில் உள்ளனர். 18-24 வயதுடைய இளைய தலைமுறையினர் பங்காளிகளாகியுள்ளனர். அவர்களின் எதிர்காலம் நிர்மூலமாகியுள்ளது. அதனைப் பார்த்துக் கொண்டு எம்மால் இருக்க முடியாது.

போதைப்பொருள் பாவனையால் கிராமங்களும் நிர்மூலமாகியுள்ளன. குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களின் கறுப்பு இராச்சியம் உருவாகியுள்ளது. போதைப்பொருள் பாவனையால் வீதி விபத்துகள், சிறுவர், மகளிருக்கு

07



# போதைப்பொருள் ஒழிப்பு செயல் திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 31

“முழு நாடுமே ஒன்றாக - தேசிய செயல்பாடு“ என்ற கருப்பொருளின் கீழ் நாடளாவிய ரீதியிலான தேசிய போதைப்பொருள் ஒழிப்பு செயல் திட்டம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

கொழும்பு - சுகததாச உள்ளக அரங்கில் நேற்று வியாழக்கிழமை காலை இந்த நிகழ்வு நடைபெற்றது.

07

# போதைப்பொருள்: 1818ஐ அழையுங்கள்

கொழும்பு, ஒக். 31

போதைப்பொருள் ஒழிப்புக்கு உதவும் வகையில் தகவல்களை தெரிவிப்பதற்கு 1818 என்ற துரித தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கு “முழு

07

# இந்திய அமைதி படை தோல்விக்கு அரசியல் தலைமையே காரணம்!

## இராணுவமோ உளவுத்துறையோ அல்ல! முன்னாள் இராணுவ தளபதி கூறுகிறார்

புதுடில்லி, ஒக். 31

இந்திய படைகள் யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டு நிலைநிறுத்தியது. தமிழ் பகுதிகளில் தேர்தலை சாத்தியமாக்கியது. ஆனால், இந்தியாவின் தடுமாற்றமான தலைமை அதன் வெற்றிகளை வீணடித்தது - இவ்வாறு இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதியான மேஜர் ஜெனரல் தீபக் மெஹ்ரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், 1987 - 1990ஆம் ஆண்டுகளில் இந்திய அமைதிப் படைகள் இலங்கையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வி கண்டமைக்கு உளவுத்துறைமீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டையும் அவர் மறுத்துள்ளார்.

“அது ஓர் இராணுவ தோல்வி

07

# யாழ். மாநகர சபையின் ஆதனம் கள்ள உறுதி முடித்து மாற்றம்!

## சீ. வீ. கே. சிவஞானம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆதனம் ஒன்று கள்ள உறுதி முடிக்கப்பட்டு - மாநகர சபையின் ஆதன வரி பதிவேடுகளில்கூட பதிவு மாற்றம் செய்யப்பட்டதாக நம்பகரமாக அறிய வந்துள்ளது என்று யாழ். மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த மோசடிக்கு மாநகர சபையின் சில அதிகாரிகளும் துணை போயுள்ளனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

07

# மருத்துவர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, ஒக். 31

மருத்துவர்கள் இன்று நாடு தழுவிய பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இன்று காலை 8 மணி தொடக்கம் 24 மணி நேரம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

முறையற்ற இடமாற்றங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தே தாம் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# சிறார் பாலியல் துன்புறுத்தல் இலங்கை பிக்கு குற்றவாளி

## ஆஸி. நீதிமன்றம் தீர்ப்பு

மெல்பர்ன், ஒக். 31

அவுஸ்திரேலியாவின் - மெல்பர்ன் நகரில் இலங்கையைச் சேர்ந்த பௌத்த துறவி ஒருவர் 6 சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ற்கு இடைப்பட்ட காலத்திலேயே இந்தக் குற்றங்களை அவர் புரிந்துள்ளார் என்று அவுஸ்திரேலியாவின்

07

# வடக்கில் கண்ணிவெடி அகற்ற ஜப்பான் அரசு ரூ. 14.4 கோடி நிதி

கொழும்பு, ஒக். 31

வடக்கு மாகாணத்தில் மனிதாபிமான அடிப்படையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை ஆதரிப்பதற்காக ஜப்பான் அரசு 4 இலட்சத்து 77 ஆயிரத்து 185 டொலரை (சுமார் 14.4 கோடி ரூபாய்) வழங்கியுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் நேற்று வியாழக்கிழமை கைச்சாத்திடப்பட்டது. இதில், இலங்கைக்கான ஜப்பான் தூதர் அகியோ இசொமட்டா, ஸ்கவிதா மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண திட்டத்தின் (SHARP) திட்ட மேலாளர் சரத் ஜெயவர்தன ஆகியோர்

07

# பிள்ளையானின் வழக்கு இன்று விசாரணைக்கு!

கொழும்பு, ஒக். 31

பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பான எழுத்தாணை உத்தரவு மனுமீதான விசாரணை இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இதன் நிமித்தம் பிள்ளையானின் சட்டத்தரணியான முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு சென்று பிள்ளையானை சந்தித்தார்.

07

# ஹெரோயினுடன் நால்வர் கைது!

பு.கஜிந்தன், த.பிரதீபன்

யாழ்ப்பாணம், ஒக். 31

ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர்கள் நால்வர் நேற்று யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் புற

07

# போதைக்கு அடிமையானவர்களே துப்பாக்கிச்சூட்டை நடத்துகின்றனர்

- கொலையாளிக்கு கூலி ரூ. 5 இலட்சம்
- பணத்துக்கு பதில் போதைப்பொருள்

கொழும்பு, ஒக். 31

நாட்டில் நடக்கும் துப்பாக்கிச்சூட்டை நடத்துபர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள். இவர்கள் போதைப்பொருளை வாங்குவதற்கு கூலிக்காக அல்லது போதைப் பொருளுக்காக இந்தக் கொலைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், நாட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம் பழத்திலிருந்து வைன் கண்டுபிடிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 31

பனம்பழத்தில் இருந்து புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட வைன் தொடர்பாக கண்டுபிடிப்பாளர் விக்டர் வடக்கு மாகாண ஆளுநருக்கு தெரியப்படுத்தியதுடன், இதன் ஊடாக ஏற்றுமதி பொருளாதாரத்தில் எவ்வாறான மாற்றத்தை உருவாக்கலாம் என்பது தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும் TAATAS நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர்கள், கண்டுபிடிப்பாளர் விக்டர் ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.


இக்கலந்துரையாடலில் பனம்பழத்தில் இருந்து புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட வைன் தொடர்பாக ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

தாராளமாக மூலப்பொருளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் உள்ளமை மற்றும் உற்பத்திச் செலவு மிகக்குறைவாக உள்ளமை ஆகியன காரணமாக உலக சந்தையில் இதற்கான கேள்வி அதிகம் உள்ளமையையும் ஆளுநருக்கு குறிப்பிட்ட கண்டுபிடிப்பாளர் விக்டர், இதன் ஊடாக ஏற்றுமதி பொருளாதாரத்தில் எவ்வாறான மாற்றத்தை உருவாக்கலாம் என்பது தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

பல மில்லியன் ரூபாய்களை ஈட்டக்கூடிய வாய்ப்புகளிருந்தும் அதனை உரியமுறையில் பயன்படுத்த தவறியுள்ளமையையும் சுட்டிக்காட்டினார். தமது தொழிற்முயற்சியின் விரிவாக்கம் மற்றும் எதிர்காலத்திட்டங்களின் ஊடாக உருவாக்கப்படவுள்ள தொழில்வாய்ப்புக்கள் தொடர்பிலும் சுற்றுச்சூழல் நேயமான இந்த உற்பத்திச் செயல்பாட்டின் அவசியம் தொடர்பாகவும் ஆளுநருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இவ்வாறான முயற்சிகள் காலத்தின் தேவையறிந்த செயல்பாடு என வரவேற்ற ஆளுநர் மாகாண சபை ஊடாக ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# செம்மணி புதைகுழிக்கு நீதி கோரி யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஒக். 31

செம்மணி புதைகுழிக்கு நீதி வேண்டியும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியத்தால் போராட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தின் வாயிலில் ஆரம்பமான போராட்டம் ஊர்வலமாக அணையா விளக்கு தூபி வரை சென்றது.

தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து போராட்டம் நடைபெற்றது. இதில், கிறிஸ்தவ பேராயர்கள், கிறிஸ்தவ மத குருக்கள், அருட்சகோதரிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.(ஐ-03-05)

# உள்ளூராட்சி மன்ற தலைவர்களுடன் சிறீதரன் எம். பி. கலந்துரையாடல்!



யாழ்ப்பாணம், ஒக். 31

உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளு மன்ற குழு தலைவர் சி. சிறீதரன் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு சிறீதரனின் யாழ்ப்பாண பணிமனையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

பாராளுமன்றத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான பிரேரணைகள், விவாதங்களின் போது உள்ளூராட்சி மன்றங்களின் செயல்பாடுகள் எனப் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், எதிர்காலத்தில் இவ்வாறான சந்திப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று சிறீதரன் எம். பி. கூறினார். (ஐ-05)

# வல்வெட்டித்துறையில் வெடிகுண்டு மீட்பு; தேடப்பட்ட சந்தேகநபர்கள் மூவர் கைது!

வடமராட்சி, ஒக். 31

வல்வெட்டித்துறையில் வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த 3 சந்தேக நபர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வல்வெட்டித்துறை பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டது. இது விடுதலை புலிகளுக்கு சொந்தமானது என்று சந்தேகிக்கப்பட்டது. இந்தக் குண்டை மறைத்து வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் தேடப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில், சந்தேக நபர்கள் மூவரும் கடல் வழியாக இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்தனர். இவர்கள் இந்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை நாடு கடத்தப்பட்டனர்.

இவ்வாறு நாடு கடத்தப்பட்ட மூவரும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய நிலையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான மூவரும் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்படுகின்றனர். (ஐ)

# கோப்பாய் பிரதேச செயலகத்தில் குறும்பட திரையிடலும் உரையாடலும்

யாழ்ப்பாணம், ஒக். 31

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 'திரைப்பட கலையை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்வோம்" என்னும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் குறும்படத் திரையிடலும் கலந்துரையாடலும் கோப்பாய் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார அதிகார சபையின் பங்களிப்போடு கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட இந்தநிகழ்வில், அப்பிரதேசத்துக்கு உட்பட்ட கலைஞர் - இயக்குநர் கனகநாயகம் வரோதயனின் குறும்படம் திரையிடப்பட்டது.

கர்ணன் படைப்பகம் தயாரிப்பில் கடந்த 2019 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு பல் வேறு விருதுகளை வென்ற 'தமிழ்ச் செல்வி' குறும்படம் இதன் போது திரையிடப்பட்டதுடன் படம் தொடர்பிலான கலந்துரையாடலும் நடைபெற் றது.

இந்நிகழ்வில் கலாசார அதிகார சபையினர், கலைஞர் கள், பிரதேச கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஐ-05-03)

# யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் போதைப்பொருள் விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், ஒக். 31

விஷ போதைப்பொருள் அச்சுறுத்தலை முழுமையாக ஒழிப்பதற்காக அரசாங்கத்தின் புதிய திட்டமான 'முழு நாடுமே ஒன்றாக - தேசிய செயற்பாடு' நேற்று வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் ஓர் அங்கமாக யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு செயல்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்கள் மத்தியில் போதைப்பொருளின் தாக்கம் எவ்வாறு சமூக மத்தியில் ஏற்படுத்தப்படுகிறது என்பது தொடர்பில் விழிப்புணர்வு கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், மாணவர்கள் மத்தியில் பாடசாலை அதிபர், பொலிஸ் உயர் அதிகாரிகள் கருத்துரைகள் வழங்கினார்கள். விழிப்புணர்வு தெரு நாடக ஆற்றுகையும் நடைபெற்றது. (ஐ)

# ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஒக். 31

சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் ஞானச்சுடர் சஞ்சிகையின் ஐப்பசி மாத 334ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். இதில், சமாதான நீதவான் ஐ. கோ. சந்திரசேகரம் வெளியீட்டுரையையும், சைவப் புலவர் செ. கந்தசத்தியதாசன் மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவர். (ஐ-02)

# நிதி பிரச்னைக்கு தீர்வு காண நீதிமன்றத்தை நாட தீர்மானம்

## பருத்தித்துறை நகர சபை

வடமராட்சி, ஒக். 31

பருத்தித்துறை நகர சபையால் பணியாளருக்கு வழங்கப்படவேண்டும் என்ற 40 வீத சம்பள அதிகரிப்பானது நிதியின்மையால் வழங்க முடியாதுள்ளது. எனவே, இது தொடர்பில் நீதிமன்றத்தை நாடுவது என்று அந்தச் சபையின் அமர்வு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் மாதாந்த அமர்வு அதன் தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளின் ஓரங்களை செப்பனிடுதல், வீதி விளக்குகளை விரைவாக பொருத்துதல், அறநெறி பாடசாலைகள் உருவாக்குவதை ஊக்கிவித்தல், இலங்கை போக்குவரத்து சபைக்கு நவீன சந்தை தொகுதி அமைந்துள்ள பகுதியில் அலுவலகம் ஒன்றை அமைத்தல், வாடகை முச்சக்கர வண்டிகளை ஒழுங்குபடுத்துதல், வரி அறவிடுதல், நவீன சந்தைப்பகுதியில் தனியார், அரச பேருநதுகளை தரிப்பிடம், போன்றவற்றை பருத்தித்துறை பொலிஸார் கண்காணித்தல், சபை தீர்மானங்களை ஒழுங்கமைத்தல், நவீன சந்தை பகுதியின் மேல் பகுதி மழை நீர் ஒழுக்கு ஏற்படுவதாகவும் அதனை நிரந்தர தீர்வாக எட்டுவதற்குரிய நடவடிக்கை எடுத்தல் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதேவேளை, ஊழியர்களுக்கான 40 வீதமான கொடுப்பனவு அதிகரிப்பு வழங்க வேண்டும் என்று வழங்கப்பட்ட சுற்றுநிருபம் தொடர்பாக ஆராயப்பட்டு, அதனை வழங்குவதற்குரிய நிதி சபையிடம் இல்லை என்றும் இதனால் மத்திய அரசின் சுற்றுநிருபத்தை மன்றினூடாக எழுத்தாணை மனு மூலம் சவாலுக்கு உட்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ-08-05-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
31.10.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## தனிக்கட்சி ஆட்சியின் சாத்தியப்பாடு

ஜே.வி.பி. ஆயுதப் புரட்சி ஒன்றின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சித்து தோல்வியுற்ற ஓர் அரசியல் இயக்கம். இந்தக் காலத்தில் மிகவும் மோசமாக அழிக்கப்பட்ட ஓர் அமைப்பு. அதன் தலைவர் ரோகண விஜயவீர உட்பட ஒரு இலட்சத்துக்கும் மேலான உறுப்பினர்களை ஜே. வி. பி. இழந்திருக்கிறது. இரண்டு ஆயுதக் கிளர்ச்சி அனுபவத்திலிருந்தும் ஜே. வி. பி. ஒரு பாடத்தை கற்றுக்கொண்டது. அதாவது, ஆயுதக் கிளர்ச்சி மூலம் இலங்கையில் அதிகாரத்தை ஒரு போதும் கைப்பற்ற முடியாது.

ஆனால், ஜனநாயக நீரோட்டத்தின் மூலம் அதிகாரத்தை என்றோ ஒருநாள் கைப்பற்ற முடியுமென்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர். அதற்காகக் கடினமாக உழைத்தனர். பிரதான கட்சிகளின் தவறுகளை அம்பலப்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் தங்களை ஒரு மூன்றாம் தரப்பாக பேணிப்பாதுகாப்பதே அவர்களின் பிரதான அரசியல் தந்திரோபாயமாக இருந்தது. அவர்கள் எதிர்பார்த்திருந்த காலம் கனிந்த போது. அவர்கள் எதிர்பார்த்த அதிகாரம் அவர்கள் வசமானது.

இந்தியாவுக்கு அருகாமையில் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பது என்றுமே நடக்காத காரியம் என்னும் பாடத்தை ஜே. வி. பி. கற்றுக்கொண்டபோது, இந்தியாவை எதிர்த்துக் கொண்டு ஆயுத வழிமுறையின் ஊடாக அதிகாரத்தைக் கைப்பற்ற முடியுமென்று விடுதலைப் புலிகள் அமைப்பு நம்பிக் கொண்டிருந்த கதை தனியானது. 2009இல் விடுதலைப் புலிகளின் அழிவானது ஜே. வி. பி. அன்று கற்றுக்கொண்ட பாடத்தை காலம் கடந்து தமிழரும் கற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி யிருந்தது.

ஜே. வி. பி., தேசிய மக்கள் சக்தி என்னும் பெயரில் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தாலும்கூட, ஜே. வி. பியின் விருப்பங்களே தேசிய மக்கள் சக்தியின் உண்மையான விருப்பமாக இருக்கிறது. பெரும் உயிரிழப்புகளால் கைப்பற்ற முடியாத அதிகாரத்தை ஜனநாயக தளத்தில் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வது எவ்வாறு என்று ஜே. வி. பி. நிச்சயம் சிந்திக்கும் - அதற்கான வழிவகைகளை ஆராயும். இந் தப் பின்புலத்தில்தான் ஜே.வி.பி. இலங்கையில் தனிக்கட்சி ஆட்சியை பலப்படுத்த முயற்சிப்பதாக எதிரணிகள் அவ்வப்போது பேசிவருகின்றன. எதிரணிகள் கூறுவது போன்று உண்மையிலேயே ஜே.வி.பி. தனிக்கட்சி ஆட்சியொன்றை பலப்படுத்த முயற்சிக்கிறதா? அவ்வாறனதொரு முயற்சி இலங்கையில் வெற்றிபெறுமா?

ஜனநாயக தளத்தில் எதிரணிகள் பலவீனமாக இருக்கின்றபோது ஒரு கட்சி அரசியலில் மேலாதிக்கம் பெறுவது இயல்பானது. தற்போதுள்ள நிலையில் இலங்கையில் தேசிய மக்கள் சக்தி மிகவும் பலமாகவும் அதனை எதிர்கொள்ளும் எதிரணிகள் பலவீனமாகவும் காட்சியளிக்கின்றன. எவ்வாறு இந்தியாவில் பாரதிய ஜனதா கட்சி பலமான தோற்றத்தோடு இருக்கிறதோ அதே போன்றதொரு நிலையில்தான் தேசிய மக்கள் சக்தி இலங்கையில் இருக்கிறது. ஒரு கூட்டணியின்றி பாரதிய ஜனதாவை எந்தவொரு கட்சியாலும் தனித்து எதிர்கொள்ள முடியாதுள்ளது.

ஜனநாயக அரசியலில் ஒரு கட்சியின் மேலாதிக்கத்தை நிறுவ முடியும். தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றில் அவ்வாறான நிலைமை காணப்படுகிறது. உதாரணமாக கம்போடியாவில் 1979ஆம் ஆண்டிலிருந்து ஒரு கட்சியே அரசியலில் மேலாதிக்கம் செலுத்தி வருகிறது. கம்போடிய முறைமையை ஜனநாயகம் மற்றும் சர்வாதிகாரம் உள்ளடங்கிய கலப்பு அரசியல் முறையென்று நிபுணர்கள் வர்ணிப்பர். ஆனால், அனைத்தும் ஜனநாயக தளத்தில்தான் நடக்கின்றன. அவ்வாறானதோர் அரசியல் சூழல் இலங்கையில் சாத்தியமில்லை என்று ஒரேயடியாகக் கூறிவிட முடியாது. ஆனால், எதிர்ப்பு அரசியல் பேரணிகள், தொழிற்சங்க நடவடிக்கைகள் என்று பழக்கப்பட்ட தென்னிலங்கை அரசியலில் அவ்வாறானதொரு தனிக்கட்சி ஜனநாயக அரசியல் எந்தளவு சாத்தியம் என்பதில் கேள்வி உண்டு. இதனை மற்றவர்கள் எல்லோரை விடவும் ஜே. வி. பி. நன்கறியும். ஏனெனில், இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளின் பிரதான தளமாக ஜே. வி. பி. இயங்கி வந்திருக்கிறது.

## முன்பள்ளிகளுக்கும் இனி பொதுவான கல்வி திட்டம்!

*கொழும்பு, ஒக். 31*

புதிய கல்வி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ், மாகாண சபைகளின் கீழ் உள்ள முன்பள்ளி பாடசாலைகளுக்கும் பொதுவான பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

இது குறித்து விளக்கமளிக்கும் கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சின் கல்வி மறுசீரமைப்பு குழுக்கூட்டம் பிரதமர் தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தில் நடைபெற்றது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை விடுத்த கோரிக்கைக்கு அமைய, பிரதமர் இந்த அறிவுறுத்தலை கல்வி அமைச்சு செயலாளருக்கு வழங்கியுள்ளார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய எம்.எஸ். உதுமாலெப்பை எம்.பி, நாட்டில் கல்வி மறுசீரமைப்பு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் இக்காலகட்டத்தில் பிள்ளைகளின் ஆரம்பக்கல்விக்கு அத்திவாரமாக அமையும் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி பட்டறைகள் நடாத்தப்பட வேண்டும். மாகாண சபைகளின் கீழ் வரும் முன்பள்ளி பாடசாலைகளுக்கு தேசிய மட்டத்திலா பொதுவான பாடத்திட்டம் உருவாக்கப்படுவது அவசியம்.

முன்பள்ளி பாடசாலைகளின் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருந்தாலும் மத்திய அரசாங்கமும் முன்பள்ளி கல்வித் துறை குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதனைக் கருத்திற்கொண்டே இவ்வாறான கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நிலையில் முன்பள்ளி பாடசாலைகளுக்கான பொதுவான பாட விதானம் தொடர்பாகவும், கல்வி மறுசீரமைப்பு தொடர்பாகவும் விளக்கமளிக்கும், விசேட கூட்டம் விரைவில் இடம்பெற ஏற்பாடாகி உள்ளது. (அ)

## சர்வதேச கடற்பரப்பில் விபத்து; 4 மீனவர்கள் பத்திரமாக மீட்பு

*கொழும்பு, ஒக். 31*

*கடந்த ஓகஸ்ட் 31 ஆம் திகதி மாத்தறை, தெவிநுவர மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சென்ற பலநாள் மீன்பிடிக் கலம், மாலைதீவுக்கு அருகில் உள்ள சர்வதேச கடற்பரப்பில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.*

*விபத்துக்குள்ளான படகு, நீரோட்டத்தின் வழியே இந்தோனேசிய கடல் எல்லை வரை அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில், அதில் தப்பிய நான்கு கடற்றொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.*

*ஆறு கடற்றொழிலாளர்களுடன் பயணித்த இந்தப் படகு, ஒக்ரோபர் 16 ஆம் திகதி விபத்துக்குள்ளாகி யுள்ளதுடன், விபத்தின் போது ஒரு கடற்றொழிலாளர் காணாமல் போயுள்ளார்.*

*அத்துடன் படகின் மேல் தளத்தில் இருந்த ஐவரில் ஒருவர் பின்னர் உயிரிழந்துள்ளதாக அறியப்படுகிறது.*

*கவிழ்ந்த படகின் மீது இருந்த நான்கு கடற்றொழிலாளர்களும் இந்தோனேசிய மீன்பிடிக் கலம் ஒன்றினால் மீட்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் மூலமாகவே இலங்கை அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.*

*தற்போது, மீட்கப்பட்ட கடற்றொழிலாளர்களை அருகில் உள்ள வர்த்தகக் கப்பல் ஒன்றுக்கு மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.*

*இது குறித்து கருத்துத் தெரிவித்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த-*

*மீட்கப்பட்ட கடற்றொழிலாளர்களை அழைத்து வருவதற்காக இலங்கை கடற்படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்று ஏற்கனவே புறப்பட்டுச் சென்றுள்ளது.*

*அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து சுமார் 300 கடல் மைல்கள் தொலைவில் இவ்விடம் அமைந்துள்ளதால், பயணத்துக்கு சிறிது காலம் எடுக்கும். ஆனாலும், கூடிய விரைவில் இந்த கடற்றொழிலாளர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (அ)*

## இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டில் நீதிமன்ற உதவியாளர் கைது!

*கொழும்பு, ஒக். 31*


*10,000 ரூபாய் பணத்தை இலஞ்சமாகக் கோரி, பெற்றுக்கொண்ட நீதிமன்ற அலுவலக உதவியாளர் ஒருவர் இலஞ்சக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேக நபர், கொழும்பு 12, மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கு அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட பிரதியொன்றை வழங்குவதற்காக 10,000 ரூபாய் பணத்தை இலஞ்சமாகக் கோரியுள்ளார்.*

*சந்தேகநபர், கொழும்பு 12, மாவட்ட நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக கடமையாற்றியவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 31 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஐப்பசி 14
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : தசமி




**மேடம்**
சின்ன சின்ன சந்தர்ப்பங்களையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். சாதிக்கும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். புதிய பாதை தெரியும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மறைமுக விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்து நீங்கும். வியாபாரத்தில் ரகசியங்களை வெளியிட வேண்டாம். சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**கடகம்**
தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கன்னி**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

**துலாம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களால் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள்விற்கும் உங்கள்கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். நன்மை நடக்கும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களிடம் வளைந்து கொடுத்து போவது நல்லது. இடம்பொருள்ஏவல்அறிந்து செயல்பட வேண்டும்

**கும்பம்**
குடும்பத்தினருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி இழப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். புகழ் கூடும்.

# ஹெரோயின், போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணத்தில் 4 இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 25 வயதுடைய நான்கு இளைஞர்கள் யாழ்.நகர்ப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 90 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் ஏழு போதை மாத்திரைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-03)

# பிரதேச அபிவிருத்தி கூட்டத்துக்கு எம்மையும் அனுமதிக்க வேண்டும்

## பிரதி அமைச்சரை தடுத்த பிரதேச சபை உறுப்பினர்கள்

வவுனியா, ஒக். 31

நெடுங்கேணி பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்துக்கு வருகை தந்த கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவை உள்ளே செல்லவிடாது வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தினர்.

பிரதேச சபையின் அபிவிருத்தி குழு கூட்டத்தில் பிரதேச சபை தவிசாளரை மட்டும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், உப தவிசாளர் மற்றும் வட்டார உறுப்பினர்கள், மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற ரீதியில் அனைவரையும் பிரதேச அபிவிருத்தி குழு கூட்டத்துக்கு அனுமதிக்க வேண்டும் என தெரிவித்து வவுனியா வடக்கு பிரதேச ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பிரதேச செயலக வாயிலில் கூடியிருந்தனர்.

இதன் பின்னர் அங்கு வருகை தந்த அபிவிருத்தி குழு தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் ஆகியோரை அபிவிருத்தி குழு கூட்டத்துக்குள் நுழைய விடாது சபை உறுப்பினர்கள் தடுத்து நிறுத்தினர்.

இதன்போது தங்களையும் கூட்டத்துக்கு அனுமதிக்க வேண்டுமென உப தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"இது அரசியல் செயல்பாடு அல்ல. பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட ஒரு நடைமுறை. எனவே, இந்த விடயம் பாராளுமன்றத்தின் ஊடாகவே செயல்படுத்தப்பட வேண்டும். ஆகவே, இங்கே உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பில் பாராளுமன்றத்தில் கதைத்து இதற்கான தீர்வை பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும், இந்த கூட்டத்துக்கு அனுமதிக்க முடியும். ஆனால், தொடர்ச்சியாக செய்ய முடியாது. அவ்வாறு அனுமதி வழங்க வேண்டுமெனில் நீங்கள் நீதிமன்றத்தை நாட வேண்டும்"- என்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க கூறினார்.

இதனையடுத்து கூட்டத்துக்கு அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட பின்னர் கூட தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை நெடுங்கேணி பொலிஸார் தடுத்து நிறுத்தியமையால் தவிசாளருக்கும் பொலிஸாருக்கும் இடையில் சிறிது நேரம் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் மீண்டும் கூட்டத்துக்கு அனுமதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-10)

# சைவப்புலவர் சங்கம் நடத்தும் கதாப்பிரசங்க போட்டி நாளை

யாழ்ப்பாணம், ஒக். 31

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் 63ஆவது பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு நடத்தவுள்ள போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 09. 00 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. இதில் கதாப்பிரசங்கம், புராண படனம், சொற்பொழிவு போட்டிகள் சங்கத்தின் தலைவர் சி. கா. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன. எனவே, போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவர்கள் உரிய நேரத்துக்கு சமுகமளித்து போட்டிகளில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(எ)

# பருத்தித்துறை நகர சபையால் சத்துணவு பொதி

யாழ்ப்பாணம், ஒக். 31

பருத்தித்துறை நகர சபையின் 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் போசாக்குத் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட 7 இலட்சம் ரூபாய் நிதியைப் பயன்படுத்தி பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட சித்தி விநாயகர் முன்பள்ளி, ஆத்தியடி முன்பள்ளி, உதயசூரியன் முன்பள்ளி, சென். அன்ரனீஸ் முன்பள்ளி, புனிதமரியாள் முன்பள்ளி, அரும்புகள் முன்பள்ளி ஆகியவற்றின் 127 சிறார்களுக்கு கௌப்பி, பயறு, உளுந்து, நாட்டரிசி போன்ற சத்துணவுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ், சத்துணவு பொதிகளை வழங்கினார்.

(எ)

# கழிவுகளை வீசுபவர்களுக்கு எதிராக நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 31

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளை கொட்டுபவர்கள் மீது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையின் கழிவகற்றல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்களை நல்லூர் பிரதேச சபை மேற்கொண்டு வருகின்றது. அது மிகப்பெரிய சவாலாக காணப்படுகின்ற போதும் அசாத்தியமானதை சாத்தியமாக்கின்ற பணியில் நாம் தொடர்ந்தும் மிகுந்த ஈடுபாட்டுடன் பயணிக்கின்றோம்.

இதன் பிரகாரம் நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் பொது இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவதனை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை முதற்கட்டமாக அதிகளவில் கழிவுகள் கொட்டப்படுகின்ற 11 பொது இடங்களை அடையாளப்படுத்தி அங்கு கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு தினமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு பொது இடங்களில் கழிவுகளை வீசுபவர்கள் கண்காணிப்பு கமராக்கள் மூலமாக அடையாளப்படுத்தப்பட்டு கிராம உத்தியோகத்தர் ஊடாக அவர்கள் தொடர்பான விவரங்கள் பெறப்பட்டு அவர்களுக்கு அபராதம் விதிக்கின்ற செயல்பாடுகளும் நடைபெற்று வருகின்றது- என்றார்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை நேரம் நீடிப்பு; இணங்கப்போவதில்லை!

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 31

**2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாடசாலை நேரத்தை பிற்பகல் 2.00 மணி வரை நீடிக்கும் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என கல்வி அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவித்ததையடுத்து, இதற்கு இணங்கப் போவதில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.**

இந்நிலையில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைகள் மீண்டும் திறக்கும்போது ஆசிரியர்கள் ஒரு நாள் பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

"பாடசாலையின் நேர நீடிப்புக்கான முடிவை அரசாங்கம் உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். இது எந்தவொரு உளவியல் அல்லது கல்வி ஆய்வு பூர்வமான முடிவும் அல்ல. எனவே பாடசாலை நேர நீடிப்பு குறித்த தீர்மானத்தை உடனடியாக திரும்பப்பெற வேண்டும்" என அவர் வலியுறுத் தியுள்ளார்.

இந்த தீர்மானத்துக்கு சங்கம் எக் காரணம் கொண்டும் இணங்காது என்றும் ஆனால், இது தொடர்பில் அதிகாரிகள் தரப்புடன் கலந்துரையாடல்களை நடத்தத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# வெளிநாடுகளில் பதுங்கியிருக்கும் பாதாள குழுக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 31

வெளிநாடுகளில் பதுங்கியுள்ள பாதாள குழு உறுப்பினர்களை நாட்டுக்கு அழைத்துவந்து, சட்டத்தின் முன் நிறுத்துவதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அரசாங்க தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

"216 பேருக்கு எதிராக சிவப்பு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் பாதாள குழுவை சேர்ந்தவர்கள் அல்லர். சுமார் 82 பேரே பாதாள குழுவுடன் தொடர்புடையவர்கள்.

பாதாள குழுவை சேர்ந்தவர்களில் 17 பேர் இதுவரையில் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்" எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாதாள குழுவை சேர்ந்தவர்களில் அதிகளவானோர் துபாயிலேயே இருக்கின்றனர். சிலர் வெளிநாட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை அழைத்து வருவதற்கான இராஜதந்திர நடவடிக்கையும் இடம்பெறுகின்றது.

இந்தோனேசியாவில் முன்னெடுக்கப்பட்டது போலவே எதிர்காலத்தில் நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நாட்டில் குற்றச்செயல்களில் ஈடுபட்டுவிட்டு வெளிநாடுகளில் பதுங்கி வாழ்வதற்கு ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். அவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். இதற்கு நீதி அமைச்சின் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றுவருகின்றது." என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கையின் முதியவர்கள் தொகை 18 வீதமாக உயர்வு!

கொழும்பு, ஒக். 31

ஆசிய பிராந்தியத்தில் வேகமாக வளர்ந்து வரும் முதியோர் மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

2012 ஆம் ஆண்டில், இலங்கையின் முதியோர் மக்கள் தொகை மொத்த மக்கள் தொகையில் 12 வீதமாக இருந்ததாகவும், 2024 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 18 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் ஆலோசகர் சமூக வைத்தியர் நிஷானி உபேசேகர தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் மேலும் உரையாற்றிய அவர்-

2012 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இலங்கையின் மக்கள் தொகையில் 12 வீதம் பேர் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்.

2024 மக்கள் தொகை கணக்கெடுப்பில், இது 18 வீதமாக உயர்ந்துள்ளது.

2040 ஆம் ஆண்டுக்குள், மக்கள் தொகையில் 25 வீதம் - அதாவது, ஒவ்வொரு நான்கு பேரில் ஒருவர் - முதியவர்களாக இருப்பார்கள் என்று நாங்கள் கணித்துள்ளோம்.

ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கை அதன் முதியோர் மக்கள்தொகையில் அதிக வளர்ச்சி விகிதங்களைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நிலைமை முக்கியமாக பிறக்கும் போது ஆயுட்காலம் அதிகரிப்பதாலும் பிறப்பு விகிதங்கள் குறைவதாலும் ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# பெலவத்தை சீனி தொழிற்சாலையை இந்தியாவுக்கு விற்க அரசு தீர்மானம்!

## குற்றம்சாட்டுகிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஒக். 31

பெலவத்தை சீனி தொழிற்சாலையின் நிதி நெருக்கடியை தீவிரப்படுத்தி தொழிற்சாலையை இந்தியாவுக்கு விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றிணைய வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணி காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நட்டத்தை எதிர்கொண்டுள்ள பெலவத்தை சீனி தொழிற்சாலையை அபிவிருத்தியடைய செய்வதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

மாறாக நிதி நெருக்கடியை மென்மேலும் தீவிரப்படுத்தும் வகையில் செயற்படுகிறது.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் விடயத்தை கடந்த காலங்களில் கடுமையாக விமர்சித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போது அந்த கொள்கையையே செயற்படுத்துகிறார்.

பெலவத்த சீனி தொழிற்சாலையின் நிதி நெருக்கடியை தீவிரப்படுத்தி தொழிற்சாலையை இந்தியாவுக்கு விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்துடன் இணக்கமாக செயற்படும் பிரபல கசினோ சூதாட்டக்காரர் இந்திய நிறுவனத்தின் இலங்கைக்கான முகவராக செயற்படவுள்ளார்.

பெலவத்தை சீனி தொழிற்சாலையின் நிதி நெருக்கடியை தீவிரப்படுத்தி தொழிற்சாலையை இந்தியாவுக்கு விற்பனை செய்யும் அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக நாட்டு மக்கள் ஒன்றிணையவேண்டும்-என்றார். (அ)

# ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் இலக்கு குறித்து தெளிவு தேவை!

## கோருகிறார் திலும் அமுனுகம



கொழும்பு, ஒக். 31

நவம்பர் 21 ஆம் திகதி பேரவாவியில் மீண்டும் நீராடுவதற்காகவா எதிர்கட்சியினர் கொழும்புக்கு வருகிறார்கள். கொள்கையற்ற வகையில் செயற்பட முடியாது. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் தலைமைத்துவம் மற்றும் இலக்கு குறித்து முதலில் தெளிவுப்படுத்தவேண்டும் என சர்வஜன அதிகாரம் கட்சியின் தேசிய அமைப்பாளர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒரு இலட்சம் ரூபாய் கொடுத்தால் கொலை செய்யும் ஆட்கள் உள்ளார்கள்.

பாதாளக்குழுக்களை மாத்திரம் நாடவேண்டிய அவசியம் கிடையாது.

தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி என்பதால் அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் நாங்கள் விமர்சிக்க போவதில்லை.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் சகல எதிர்க்கட்சிகளும் இல்லை.

எதிர்க்கட்சித் தலைவரும் இல்லை.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் எண்ணக்கரு தெளிவற்றதாக உள்ளது.

ஆகவே இந்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் நாங்கள் அங்கம் வகிக்க போவதில்லை.

எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதி நுகேகொடையில் பேரணி நடத்துவதாக குறிப்பிடுகிறார்கள்.

நவம்பர் 21 ஆம் திகதி பேரவாவியில் மீண்டும் நீராடுவதற்காகவா இவர்கள் கொழும்புக்கு வருகிறார்கள்.

கொள்கையற்ற வகையில் செயற்பட முடியாது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் தலைமைத்துவம் மற்றும் இலக்கு குறித்து முதலில் தெளிவுப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி குறித்து எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 31

சமூக ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்படும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் தொடர்பான நிதி மோசடி சம்பவங்கள் குறித்து பணியகத்திற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த விளம்பரங்களில் பெரும்பாலானவை போலியானவை என்றும், அவை பணியகத்திடமிருந்து ஒப்புதல் பெறவில்லை என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனவே, வெளிநாட்டு வேலை தேடுபவர்கள், அத்தகைய வேலைகளை வழங்கும் நிறுவனம் பணியகத்தின் செல்லுபடியாகும் உரிமத்துடன் சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும், வேலை வாய்ப்பு பணியகத்தால் அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும், பணம் செலுத்துவதற்கு முன்பு அல்லது பயண ஆவணங்களை ஒப்படைப்பதற்கு முன்பு சரிபார்க்க வேண்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கேட்டுள்ளது.

மேலும், மோசடி நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் பற்றிய தகவல் யாரிடமாவது இருந்தால், 0112882228 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது 1989 என்ற துரித எண் மூலமாகவோ சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பிரிவுக்குத் தெரிவிக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கோரியுள்ளது.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களில் மொத்தம் 3,253 இலங்கையர்கள் தென் கொரியாவிற்கு வேலைவாய்ப்புக்காகச் சென்றுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “போதைப்பொருளை ஒழிப்பது அரசின் பொறுப்பு மட்டுமல்ல”

கல்முனை, ஒக். 31

“முழு நாடும் ஒன்றாக தேசிய செயல்பாடு” எனும் தொனிப் பொருளிலான போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டம் இலங்கை சமூகத்தின் ஒழுக்கம், நலன் மற்றும் எதிர்கால தலைமுறையின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்படும் வரலாற்று சிறப்புமிக்க முயற்சியாகும் என்று வுமென்ஸ் கோப்ஸ் அமைப்பின் தலைவி றிகாஸா ஷர்பீன் தெரிவித்துள்ளார்.

“விஷ போதைப்பொருளை ஒழிப்பது அரசாங்கத்தின் பொறுப்பு மட்டுமல்ல: இது நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் சமூக கடமையாகும். இந்த முயற்சிக்காக அரச இயந்திரங்கள், முப்படைகள், ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் ஒருமித்து செயல்பட வேண்டும்.

குறிப்பாக பெண்கள் சமூகம் மற்றும் குடும்பங்களுக்காக இது மிகப்பெரும் நன்மையை ஏற்படுத்தும். போதைப்பொருள் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் குடும்பத் தலைவர்கள் மீண்டும் நம்பிக்கை மிக்க வாழ்க்கைக்கு திரும்புவதற்கு இது வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை” - என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(எ)

# அம்பாறை மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு கூட்டம்

கல்முனை, ஒக். 31

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவின் ஒருங்கிணைப்பிலும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் பிரதி அமைச்சருமான வசந்த பியதிஸ்ஸ தலைமையில் அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, பாராளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுல ரத்நாயக்க, எஸ். உதுமாலெப்பை, ஏ. ஆதம்பாவா, எம். எஸ். அப்துல் வாசித், முத்து ரத்தத்த, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் தலங்கம உள்ளிட்ட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-01)

# வாசிப்பு மாதத்தையொட்டி திருமலையில் கவியரங்கம்

திருகோணமலை, ஒக். 31

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு திருகோணமலை தமிழ் அமுதம் கலை வட்டம் மற்றும் திருகோணமலை மாநகர சபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் “மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்” என்ற தலைப்பில் கவியரங்க நிகழ்வு புதன்கிழமை பொது நூலக கேட்போர் கூடத்தில் தமிழ் அமுதம் கலை வட்டத்தின் தலைவி கவிஞர் திருமதி சு. யுவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாநகர சபையின் முதல்வர் க. செல்வராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில் கவிஞர்களான அமீர்டீன் முகம்மட், அரசரெத்தினம் அச்சுதன், எம். சாலி, கவிச்சுடர் சிவரமணி, ஞா. நிரோயினி, ஜெயராஜா கிருஷ்ந்ஷின், திருமதி த. வசந்தகுமார் ஆகியோர் கவிபாடினர்.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாநகர சபை பொது நூலகத்தின் நூலகர் மு. லெ. நிம்சானா, நூலக உத்தியோகத்தர்கள், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். முரளிதரன், உள்ளூராட்சி உதவியாளர் திருமதி வி. கலைமதி, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(எ-12)

# பாரிசவாத தினத்தையொட்டி கல்முனையில் விழிப்புணர்வு



கல்முனை, ஒக். 31

உலக பாரிசவாத தினம் ஒக்ரோபர் 29 ஆம் திகதி அனுசரிக்கப்படுகிறது. குறித்த தினத்தையொட்டி அம்பாறை மாவட்டம், கல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவு ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

“ஒவ்வொரு நிமிடமும் பெறுமதியானது” எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கல்முனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கல்முனை வடக்கு மற்றும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனை தாதிய உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் தாதிய பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு நிகழ்வு சைக்கிள் ஓட்டம், நடைபவனி, துண்டுப் பிரசுரம் விநியோகம் அடங்கலாக பேரணியாக கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனை வரை சென்றதுடன் அங்கிருந்து அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையை அடைந்து மீண்டும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நிறைவடைந்தது.

(எ-01)

# போதைப்பொருள் பேரழிவை ஒழிக்க கல்முனையில் தெளிவுபடுத்தல்




கல்முனை, ஒக். 31


போதைப்பொருள் பேரழிவை வேரோடு ஒழிப்பதற்கான முழு நாடுமே ஒன்றாக - தேசிய செயல்பாடு தொடர்பில் கல்முனை பிரதேச செயலகத்தில் உறுதி எடுத்தல் நிகழ்வு அம்பாறை, கல்முனை பிரதேச செயலாளர் எம். அன்சார் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்றது.

இதன்போது போதைப்பொருள் பேரழிவை வேரோடு ஒழிப்பதற்கான “முழு நாடுமே ஒன்றாக” தேசிய செயல்பாடு தொடர்பில் பிரதேச செயலாளரால் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. மஜீட், பிரதேச செயலக கணக்காளர் எஸ். அமீர் அலி, பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம். பளீல், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஜனூபா நௌபர், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி அன்வர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த சிறிய ரக லொறி விபத்து!



திருகோணமலை, ஒக். 31

கிண்ணியா - கண்டி பிரதான வீதி, முனைச்சேனை பகுதியில் சிறிய ரக லொறி ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து, நேற்றுக் காலை முனைச்சேனை சுமையா அரபு கல்லூரிக்கு முன்னால் இடம்பெற்றுள்ளது.

சூரங்கல் பகுதியிலிருந்து கிண்ணியா நோக்கி சென்று கொண்டிருந்த வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானதாகவும் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து குறித்து, மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# தென்கிழக்கு பல்கலை. களஞ்சியசாலையில் தீ!



கல்முனை, ஒக். 31

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் மாணவர் விடுதியின் களஞ்சியசாலையில் நேற்று முன்தினம் 07. 20 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்து குறித்து தகவல் கிடைத்தவுடன் பல்கலைக்கழக நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுத்ததன் பயனாக தீ கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வரப்பட்டது.

தீயை அணைப்பதற்காக அம்பாறை, அக்கரைப்பற்று மற்றும் கல்முனை தீயணைப்புப் படையினர் மட்டுமல்லாமல் சம்மாந்துறை பிரதேச சபையின் தீயணைப்புக் குழுவினரும் இணைந்து தீயணைப்பு பணியில் ஈடுபட்டனர்.

(எ-06)

# இந்திய உதவித்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு தளபாடம்



கல்முனை, ஒக். 31

கல்வி மேம்பாட்டை கருத்தில் கொண்டு இந்திய உதவித் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

நிந்தவூர் அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பாடசாலைகளுக்கான தளபாடங்களை கையளித்தார்.

இந்த நிகழ்வில் பாராளு மன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், எம். தாஹிர், கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் ஸஹதுல் நஜீம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். சாஜித், நிந்தவூர் கோட்ட கல்விப் பணிப்பாளர் எம். முதாரிஸ் உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள் ஒழிப்பு...

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் பிரதமர் ஹரிணி அமரசூரிய, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால உள்ளிட்ட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் பொது மக்கள் என நூற்றுக்கணக்கானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அரச நிறுவனங்களின் பங்களிப்புக்கு அப்பால், பரந்த பொதுமக்களின் பங்கேற்புடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளது. பயனுள்ள செயலாக்கத்தை உறுதிப்படுத்த, மாவட்ட வழிகாட்டுதல் குழுக்கள், பிராந்திய வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் அடிமட்ட அளவில் பொது பாதுகாப்பு குழுக்கள் உட்படப் பல கட்டங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பு இதற்காக நிறுவப்பட்டுள்ளது.

சமூகத்தின் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 23 உறுப்பு அமைப்புகளை கொண்ட 'ஒன்றிணைந்த தேசம்' தேசிய வழிகாட்டுதல் சபை மத்திய செயல்பாட்டு அமைப்பாகச் செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிள்ளையானின்...

இதன்போது வழக்கு தொடர்பில் அவருடன் கலந்துரையாடினார் என்று உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிள்ளையான் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று அரசாங்கம் தெரிவித்து வருகிறது. எனினும், கிழக்கின் பேராசிரியர் ஒருவர் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலேயே அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தான் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமையில் எவ்வித அடிப்படையும் இல்லை எனவும் இதனூடாக தனது உரிமை மீறப்பட்டுள்ளது என்று அறிவித்து உத்தரவிடுமாறு கோரி பிள்ளையான் தாக்கல் செய்த எழுத்தாணை மனு இன்று உயர்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பிள்ளையான் கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கில்...

கையெழுத்திட்டனர்.

இந்த புதிய திட்டத்தின் கீழ், 1.8 சதுர கிலோ மீற்றருக்கும் அதிகமான நிலம் கண்ணிவெடி இல்லாததாக மாற்றப்படும். இதன்மூலம் சுமார் 600 பேர் தங்கள் நிலங்களுக்குத் திரும்புவதற்கும் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் ஆயிரத்து 500 பேர் தங்கள் பொருளா தார நடவடிக்கைகளை விரிவுபடுத்தவும் முடியும் என்றும் எதிர்பார்க்கப்படு கிறது.

2002 முதல் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் நன்கொடை வழங்கி வருகிறது. இது வரை, 4.8 கோடி டொலருக்கும் அதிகமான நிதியுதவியை வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போதைப்பொருளுக்கு...

எதிரான துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன. பெண்கள் வீதிகளில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது பொருளாதாரத்துக்கும் பெரிய வீழ்ச்சியாகும்.

கடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் அனைத்தும் குற்றக்கும்பல்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல்களாகும். அவர்களிடம் உள்ள பணபலத்தின் ஊடாக அரச இயந்திரத்தை ஆக்கிரமிக்க எத்தனிக்கின்றனர். அவர்களிடம் துப்பாக்கிகள் உள்ளன. அரசாங்கத்துக்கு மாத்திரமே ஆயுதங்களை கொண்டுவர அனுமதி உள்ளது. அரசாங்கத்திடம் உள்ள ஆயுதங்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களிடம் செல்கிறது. ஆகவே, விசாரணைகளின்போது குற்றக்கும்பல்களுடன் இராணுவத்தினர், பொலிஸார் உள்ளிட்ட படைத் தரப்பினரின் பங்களிப்பு உள்ளமை புலனாகிறது. குற்றக்கும்பல்களின் நிதி பலம் இதில் பெரும் செல்வாக்கு செலுத்துகிறது. இவ்வாறாக கறுப்பு இராச்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் இரண்டு இராச்சியங்கள் உருவாக இடமளிக்க முடியாது. நாட்டில் ஓர் இராச்சியமே இருக்க முடியும். அதுவும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இராச்சியம் மாத்திரமே இருக்க முடியும்.

இந்த வலையமைப்பிலிருந்து விடுபட சிலர் அஞ்சுகின்றனர். போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிக்கத் தயாராகவுள்ளோம். ஏற்கனவே இதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

எதிர்காலத்தில் சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், இராணுவம், புலனாய்வு பிரிவுகள் மற்றும் பொலிஸ் ஆகிய அனைத்தும் இணைந்த ஒரு தேசிய செயல்பாட்டு மையம் அமைக்கப்படும். இதன்மூலம் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய யாரும் வெளிநாடுகளுக்கு செல்லவோ அல்லது மறைந்து தப்பிச் செல்லவோ இடமிருக்காது.

தலைவர்களை ஒன்றிணைத்து பல திட்டங்களைச் செயல்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அதற்கு மதத் தலைவர்களின் ஆலோசனை அவசியம். இந்த அபாயம் குறித்துச் சமூகத்துக்கு செய்தி தெரிவிக்கும் பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு அரசியல்வாதிகளிடமிருந்து ஆதரவு கிடைத்துள்ளது. இதனால் விசாரணைகள் முடங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனை முடிவுறுத்த வேண்டுமாயின், பொலிஸாரை சுத்தப்படுத்த வேண்டும் என மக்கள் கூறுகின்றனர். எம்முடைய ஆட்சியிலேயே பல பொலிஸார் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் அதிகாரிகள் சேவையின் கௌரவத்தை பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிப் பயணிக்க வேண்டும்.

குற்றக்கும்பல்கள், குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் தாம் மறைந்து இருக்கின்றனர் என்று எண்ணுகின்றனர். உண்மையில் அவ்வாறு இல்லை. அவர்கள் எங்கு மறைந்துள்ளார்கள் என்பதை நாம் நன்கு அறிந்துள்ளோம். நாம் அனைவரையும் அவதானித்துக் கொண்டே உள்ளோம். குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களின் பின்னணியில் அரசியல் செல்வாக்கு உள்ளது. இதன் காரணமாகவே அவற்றை தடுக்க முடியவில்லை. எம்முடைய ஆட்சியில் குற்றக் கும்பல்களுக்கான அரசியல் செல்வாக்கு நிறுத்தப்பட்டுள்ளது.

நாம் பொலிஸாருக்கு அதிகாரம், சுயாதீனத்துவம் வழங்குவோம். இதனை நிறுத்த வேண்டும். இதற்கு எதிரான மாபெரும் மக்கள் குரல் வேண்டும். நாம் அனைவரும் ஒன்றாக இணைய வேண்டிய நேரம் இது. இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக தனிப்பட்ட ஒருவருக்கு எவ்வளவு நம்பிக்கை இருந்தாலும் தனியாக முடியாது. அரசாங்கத்தால் மாத்திரம் முடியாது. பொலிஸாரால் மாத்திரம் முடியாது. அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - இதுதான் சந்தர்ப்பம்.

இறுதியாக, போதைக்கு அடிமையான வர்களுக்கும் விற்பவர்களுக்கும் உடனடியாக இதிலிருந்து விலகுமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு எதிரான சக்திவாய்ந்த வலையமைப்பு கட்டமைக்கப்பட்டு வருகிறது. நிச்சயமாக இந்த மாயாஜால சூறாவளியை அழிப்போம் - என்றார். (ஐ)

## ஹெரோயினுடன்...

நகரப் பகுதியான மணியந் தோட்டத்தில் வைத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கைதானவர்கள் 24, 25 வயதினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது.

கைதானவர்களிடமிருந்து 2 கிராம் 540 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## யாழ். மாநகர...

நேற்றைய தினம் அவர் நல்லூரிலுள்ள தனது பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், யாழ். மாநகர சபையின் முன்னைய கட்டடத்துக்குக் கிழக்கு பக்கமாக இருந்த வாசலுக்கு எதிராக ஒரு பெரிய கட்டடம் இருந்தது. அந்த கட்டடமும் மாநகர சபையின் பணிமனையாக இருந்தது. அது ஒரு கொள்வனவு செய்யப்பட்ட கட்டடம். ஆனால், அண்மையில் அதனை தற்செயலாக பார்த்த போது அது மாநகர சபையின் சொத்து என்ற நிலையில் இல்லாமல் வேறு பலர் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலைமை இருந்தது. இதை ஆராய்ந்தபோது அந்த சொத்துக்கு கள்ள உறுதி முடிக்கப்பட்டு - மாநகர சபையினுடைய ஆதன வரி பதிவேடுகளில்கூட பதிவு மாற்றம் செய்யப்பட்டதாக நம்பகரமாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

மக்களின் சொத்துக்கு ஏற்பட்ட நிலை பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளேன். இந்த ஆதனம் அப்போது வாடி வீடு இருந்த வீதி, முன்னர் முகப்பு வீதி என அழைக்கப்பட்டு பின்னாளில் இராசேந்திர பிரசாத் வீதி என மாற்றப்பட்ட வீதிக்கு அடுத்ததாக இருந்தது.

இந்த ஆதனத்தின் கட்டடத்தின் மேல் பகுதியிலேயேதான் பொது நூலக ஸ்தாபகர் செல்லப்பா பொது நூலகத்தை ஆரம்பித்து வைத்தார். அதற்கு ஆதாரமாக யாழ். மாநகர சபையின் வெள்ளி விழா மலரை குறிப்பிடலாம். அந்த மலர் வெளியிடும்போது யாழ். மாநகர சபையின் கணக்காளராக நான் இருந்தேன். குறித்த காணி தனியாரின் காணியாக இருந்தது. யாழ். மாநகர சபை, நகர சபையாக இருந்த காலத்தில் அந்தக் கட்டடம் தேவை கருதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இந்த புத்தகத்திலே கொள்வனவு செய்த கட்டடங்கள் என்று பட்டியலில் களஞ்சியசாலை வசதிக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக கடந்த 23ஆம் திகதி மாநகர சபை ஆணையாளருக்கு ஒரு கடிதம் எழுதி இது தொடர்பிலான நடவடிக்கைக்கு வலியுறுத்தி இருக்கிறேன். இந்த விடயத்தை வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளேன்.

2006ஆம் ஆண்டுக்குப் பின்னரே தான் இந்த இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது பற்றை வளர்ந்து மாநகர சபை சொத்தாகவே பார்க்கப்படவில்லை. தற்போது அங்கு தற்காலிக வியாபார நிலையம் ஒன்று இயங்கு கிறது. அது குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை. உடனடியாக அதனை மீளப்பெறு வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாநகர முதல்வருக்கும் கடிதத்தின் பிரதியை அனுப்பி இருக்கி றேன்.

இந்த விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த மோசடிக்கு யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற விடயம் வெளிப்படுத்தப்பட வேண்டும். இது விடயத்தில் ஆளுநர் உள்ளிட்ட அதி காரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ-3)

## சிறார்...

பிராந்திய நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தது.

பிக்குவால் பாதிக்கப்பட்ட பலர் பொலிஸில் முறையிட்டதை அடுத்து, 2023ஆம் ஆண்டு அவர்மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவர் குற்றவாளி என்று தெரிவித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அவர் மீதான 19 குற்றச்சாட்டுகளில் 17 குற்றச்சாட்டுகளில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை இன்றைய தினமும் நடைபெறும் என்றும் அவுஸ்திரேலிய நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஐ)

## இந்திய...

அல்ல - மாறாக ஓர் அரசியல் தோல்வி. இந்திய படைகள், யாழ்ப்பா ணத்தை நிலைப்படுத்தின. தமிழ் பகுதி களில் தேர்தல்களை சாத்தியமாக்கின. ஆனால், இந்தியாவின் தடுமாற்றமான தலைமை அதன் வெற்றிகளை வீணடித் தது" - என்றும் அவர் மேலும் கூறினார்.

முன்னாள் இராஜதந்திரியும் ராஜீவ் காந்தியின் உதவியாளருமான மணி சங்கர் ஐயர் இலங்கையில் இந்திய அமைதிப் படையின் தோல்விக்கு இராணுவமும், உளவுத்துறையும் குற்றஞ்சாட்டிய சமீபத்தில் கூறிய கருத்துகள் தொடர்பிலேயே ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் தீபக் மெஹ்ரா மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஐ)

## போதைப்பொருள்...

நாடுமே ஒன்றாக" தேசிய செயல் பாட்டு திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் துரித தொலைபேசி இலக்கம் 24 மணித்தியாலமும் செயல்படும்.

1818 இலக்கத்தின் ஊடாக பொதுமக்களுக்கு நாடு பூராகவும் இயங்கும் போதைப்பொருள் வர்த்தகம், விநியோகம் அல்லது அதனுடன் தொடர்புடைய சந்தேகத்துக்கு இடமான செயல்பாடுகள் குறித்து சரியான தகவல்களை வழங்க முடியும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## போதைக்கு...

சம்பவங்கள் பலவற்றில் கொலையாளிக்கு கொலை செய்யப்பட்டவர்களுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் பொலிஸார் கூறினர்.

புலனாய்வாளர்களின் கூற்றுப்படி ஒப்பந்த கொலையாளிகள் பெரும்பாலும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களாக உள்ளனர். அவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக - முதன்மையாக தங்கள் போதைப்பொருள் வாங்குவதற்காக பணத்தைப் பெறுவதற்கு துப்பாக்கிச் சூடு நடத்த ஒப்புக்கொள்கின்றனர்.

பல கொலைகள் 4 இலட்சம் ரூபாய் முதல் 5 இலட்சம் ரூபாய் வரையான செலவில் மட்டுமே. செய்யப்பட்டுள்ளன. சில சந்தர்ப்பங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களுக்கு பணத்துக்குப் பதிலாக போதைப்பொருள் வழங்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆண்டு ஜனவரி முதல் நாட்டில் 100இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. இதன் விளைவாக 52 பேர் உயிரிழந்தனர். இந்த ஆண்டு பதிவான 103 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 76 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவை.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் வலைப்பின்னல்களை அகற்ற தொடர்ச்சியான நடவடிக்கைகள் மற்றும் சிறப்புப் பணிக்குழுக்கள் நிறுத்தப்பட்ட போதிலும், இதனை கட்டுப்படுத்த இன்னும் தீவிரமான நடவடிக்கைகள் தேவை என்பதை அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நுகேகொடை பேரணிக்கு முன் என்னை சிறையிலடைக்க சதி!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 31

எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி கூட்டு எதிரணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நுகேகொடை பேரணிக்கு முன்னதாக தம்மைச் சிறையில் அடைக்க அரசாங்கம் சதி செய்வதாக முன்னாள் அமைச்சரும், பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில குற்றம் சாட்டியுள்ளார்.

கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

அண்மையில் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர் ஒருவர், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவில் தனக்கு எதிராக ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளதாக கம்மன்பில தெரிவித்தார்.

ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 125 இன் கீழ், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தை தமது ஊடக அறிக்கைகள் மூலம் அவதூறு செய்ததாகக் குற்றம் சாட்டி, இந்த முறைப்பாட்டை ஆணைக்குழு அதிகாரிகளே தயாரித்து பதிவு செய்ததாக அவர் குற்றம் சாட்டினார்.

இந்த முறைப்பாடு அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும், முறைப்பாடு செய்ததாகக் கூறப்படும் அரச சார்பற்ற நிறுவனத்தின் செல்லுபடியான பதிவு இலக்கம் கூட அதில் இல்லை என்றும் கம்மன்பில தெரிவித்தார்.

தற்போதைய பணிப்பாளர் நாயகத்தின் நியமனம் குறித்து தாம் முன்பு வெளியிட்ட கருத்துகள், உயர் நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசிகளின் அடிப்படையில் அமைந்தவை என்று அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

நேர்காணலில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாதவ தென்னக்கோன் புறக்கணிக்கப்பட்டு, ரங்க திஸநாயக்க நியமிக்கப்பட்டதற்கு சிரேஷ்ட அரசாங்கத் தலைவர்களின் செல்வாக்கே காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தம்மைக் கைது செய்ய ஆளும் நிர்வாகம் மேற்கொள்ளும் ஏழாவது முயற்சி இது என்றும், சில அமைச்சர்கள் தனிப்பட்ட முறையில் தமது தடுப்புக்காவலுக்கு அழுத்தம் கொடுப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார். (அ)

# பல திணைக்கள தலைவர்களிடம் சிறந்த தலைமைத்துவம் இல்லை!

## வடக்கு மாகாண ஆளுநர் ஆதங்கம்

கிளிநொச்சி, ஒக். 31

**“ஒரு நிறுவனத்தின் வெற்றியும் தோல்வியும் அந்த நிறுவனத்தின் தலைவரின் தலைமைத்துவப் பண்பில்தான் தங்கியிருக்கிறது. இன்று பல திணைக்களங்களின் தலைவர்களிடத்தில் சிறந்த தலைமைத்துவத்தைக் காண முடியவில்லை.”**



-இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண ஆளுநர் என்.வேதநாயகன்.

“தூய்மை இலங்கை” செயற்றிட்டத்தின் கீழ் “நாளைய தலைவர்களை உருவாக்குதல்” என்ற தேசிய திட்டத்தை வடக்கு மாகாணத்தில் ஆரம்பிப்பதற்கான நிகழ்வு கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்-

ஒரு நிறுவனத்தின் வெற்றியும் தோல்வியும் அந்த நிறுவனத்தின் தலைவரின் தலைமைத்துவப் பண்பில்தான் தங்கியிருக்கிறது. இன்று பல திணைக்களங்களின் தலைவர்களிடத்தில் சிறந்த தலைமைத்துவத்தைக் காண முடியவில்லை.

ஒரு வேலையை எவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சிந்திப்பதை விட அதைச் செய்யாமல் விடுவதற்கான காரணங்களைத் தேடுபவர்களாகவே சில திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளனர்.

சேவைபெற வருபவர்கள் எமது மக்கள் என்று அந்தத் தலைவர்கள் சிந்திப்பதில்லை. அவர்களுக்கு எப்படி உதவி செய்யலாம் என்று நினைப்பதில்லை. இவற்றையெல்லாம் மாற்றியமைக்கவேண்டுமாயின், அடுத்த தலைமுறையாவது மிகச் சிறந்த தலைமைத்துவப் பண்புடன் கட்டியெழுப்பப்படவேண்டும்.

புத்தாக்க சிந்தனையையும் தலைமைத்துவப் பண்பின் ஊடாக நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் எங்கள் மக்களுக்காக எவ்வாறான விடயங்களை புதிதாகச் செய்யலாம். அதன் ஊடாக அவர்களை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று சிந்திக்கின்ற தலைவர்களாக நீங்கள் உருவாகவேண்டும் என்பதுதான் எதிர்பார்ப்பாக உள்ளது-என்றார்.

மாணவர்களின் மனப்பாங்கு மற்றும் தலைமைத்துவத்தை விருத்தி செய்வது தொடர்பான இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் 8 பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்கள் கலந்துகொண்டனர். காலை 7 மணியிலிருந்து இரவு 7 மணி வரை இந்தச் செயலமர்வு நடைபெற்ற செயலமர்வில் மாலை மாணவர்களின் பெற்றோருக்கான செயலமர்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயசந்திரன், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சு.லாவண்யா, கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அ.க.சிவனருள் ராஜா, கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் அதிபர் அ.பங்கயற்செல்வன் மற்றும் வளவாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# விஸா செயல்பாடுகளை நேரடியாக கையாளவுள்ளது இந்தியத் தூதரகம்

கொழும்பு, ஒக். 31

இந்திய தூதரகம், இந்தியாவுக்கான அனைத்து விஸா செயற்பாடுகளையும், எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி முதல் நேரடியாக கையாளவுள்ளது. அதன்படி தற்போது இந்திய விஸாக்களை பெற்றுக் கொடுக்கும் வெளிப்புற சேவை வழங்குநரான ஐ.வி.எஸ். லங்கா நிறுவனத்தின் சேவைகள் இன்று வரை மாத்திரமே முன்னெடுக்கப்படும் என இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

குறித்த சேவை வழங்குநருடனான ஒப்பந்த காலம் நிறைவடைவதால், தற்காலிக ஏற்பாடாக இந்திய தூதரகம் மற்றும் கிளை அலுவலகங்களில் நேரடியாக விண்ணப்பங்களை சமர்ப்பித்து விஸாக்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கொழும்பிலுள்ள இந்திய தூதரகம், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகம் மற்றும் கண்டியிலுள்ள உதவி தூதரகம் ஊடாக அனைத்து விதமான விஸா மற்றும் தூதரக சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருள் தடுப்புக்கு எதிராக இரட்டை வேடம் போடுகின்றது அரசு!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 31

போதைப்பொருள் தடுப்புகளை முன்னெடுக்கும் அரசாங்கமானது தமக்கு சார்பானவர்களுக்கு ஒரு முகத்தையும் தனக்கு எதிரானவர்களுக்கு இன்னொரு முகத்தையும் காட்டிக்கொண்டு பாரபட்சமாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் நாட்டு நிலைமை சம்பந்தமாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இக்கருத்தை முன்வைத்தார்.

அத்துடன் நாட்டின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக வகுப்பு எடுத்த அரசாங்கம், இன்று தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ள நிலையை மறந்துள்ளதாகவும் அவர் குற்றச்சாட்டினார். (அ)

# தேசிய மக்கள் சக்தி உறுப்பினருக்கு கொலை மிரட்டல்!

கொழும்பு, ஒக். 31

ஹோமாகம பிரதேச சபை தவிசாளரும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினருமான சுசன் ரத்நாயக்கவுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி, நண்பகல் அலுவலகத்தில் பொது மக்கள் தினத்தை நடத்திக்கொண்டிருந்தபோது அலுவலக கைபேசிக்கு அழைப்பெடுத்து ஹந்தயா என தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட ஒருவராலேயே இக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, இதன் ஆரம்ப கட்ட விசாரணைகளின் அடிப்படையில் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நவ. 21 பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காவிடில் கட்சிக்கே பின்னடைவு

கொழும்பு, ஒக். 31

நுகேகொடை கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காவிட்டால் அது அக்கட்சிக்கே அரசியல் ரீதியில் பின்னடைவாக அமையும் என்று பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரான சஞ்ஜீவ எதிரிமான்ன மேற்படி விடயத்தை சுட்டிக்காட்டினார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் ஜனநாயக விரோத நடைமுறைகளுக்கு எதிராக நவம்பர் 21 ஆம் திகதி நுகேகொடையில் கூட்டம் மற்றும் எதிர்ப்பு பேரணியை நடத்துவதற்கு முக்கியமான சில எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

பொதுஜன பெரமுன, சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் மகாஜன கட்சி என்பன இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. எனினும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குறித்த பேரணியில் பங்கேற்காதிருக்க தீர்மானித்துள்ளது.

இந்நிலையிலேயே பொதுஜன பெரமுன கட்சி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

“கூட்டத்தில் பங்கேற்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் முடிவெடுக்கும் உரிமை ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளது. அந்த உரிமையை நாம் மதிக்கின்றோம். எனினும், பிரதான எதிர்க்கட்சிக்குரிய பொறுப்பை அக்கட்சி நிறைவேற்றும் என நம்புகின்றோம்.

நுகேகொடை கூட்டத்தில் அக்கட்சி பங்கேற்கும் என நம்புகின்றோம். இன்னும் காலம் உள்ளது. சிலவேளை பங்கேற்காவிட்டால் அது அக்கட்சிக்கே பாதகமாக அமையக்கூடும்.” எனவும் சஞ்ஜீவ எதிரிமான்ன குறிப்பிட்டார். (அ)

# சனத்தொகை அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 31

இலங்கையின் சனத்தொகை ஆண்டு தோறும் 0.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2012ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் இலங்கையின் சனத்தொகை, ஆண்டுதோறும் சராசரியாக 0.5 வீதத்தால் அதிகரித்துள்ளதாகச் சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் மொத்த சனத்தொகைப் போக்கைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள இந்த உத்தியோகபூர்வ தரவானது, தேசிய மட்டத்தில் மக்கள்தொகை வளர்ச்சி மெதுவாகவும் சீராகவும் நடைபெற்றுள்ளதைக் காட்டுகிறது.

இந்தச் சனத்தொகை அதிகரிப்பு வீதம் 12 வருட காலப் பகுதியை உள்ளடக்கியதாகும். ஆண்டுக்கு 0.5 வீதம் என்ற இந்த மிதமான அதிகரிப்பு வீதம், நாட்டின் பிறப்பு வீதம், இறப்பு வீதம் மற்றும் நிகர குடியேற்ற வீதம் ஆகிய காரணிகளின் ஒருங்கிணைந்த விளைவைச் சுட்டிக்காட்டுகிறது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org